2019 ஆம் ஆண்டு தொடர்பிலான வருடாந்த செயற்திறன் அறிக்கை

சமூக சேவைகள் திணைக்களம்

செலவுத் தலைப்பு இலக்கம்:- 216

சமூக சேவைகள் திணைக்களம்

இரண்டாவது மாடி

செத்சிறிபாய கட்டம் II

பத்தரமுல்ல

தொலைபேசி	- 0112187050
பெக்ஸ்	- 0112186276
மின்னஞ்சல்	- dirss@sltnet.lk
	- dirssdss@gmail.com
இணையத்தளம்	- www.socialservices.gov.

உள்ளடக்கம்

		பக்கம்
அத்தியாயம் 01	- நிறுவனத்தின் தோற்றுவாய்/நிறைவேற்றுப் பொழிப்பு	59 - 83
அத்தியாயம் 02	- முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்	84 - 103
அத்தியாயம் 03	- வருடத்தின் ஒட்டுமொத்த நிதிசார் செயற்திறன்	104 - 110
அத்தியாயம் 04	- செயற்திறன் சுட்டிகள்	111 - 112
அத்தியாயம் 05	- பேண்தகு அபிவிருத்தி இலக்குகளினை அடைவதன் செயற்திறன்	113 - 115
அத்தியாயம் 06	- மனித வளத்தின் தோற்றுவாய்	116 - 121
அத்தியாயம் 07	- இணக்க அறிக்கை	122 - 130

அத்தியாயம் 01

நிறுவனத்தின் தோற்றுவாய்/நிறைவேற்றுப் பொழிப்பு

1.1அறிமுகம்

ஸ்ரீமத் ஐவர் ஜெனிங்க்ஸ் அவர்களின் தலைமையில் 1944 ஆம் ஆண்டில் நியமிகப்பட்ட சமூக சேவைகள் ஆணைக்குழுவின் பரிந்துரையின் கீழ் 1948 பெப்ரவரி மாதம் 01 ஆந் திகதி சமூக சேவைகள் திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது சமூக சேவைகள விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் கீழ் திணைக்களத்தின் கடமைப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுகின்றன.

ஓரங்கட்டப்பட்ட மற்றும் பாதகநிலைக்கு உட்பட்ட நாட்டின் சமூகங்களுக்கு மிகவும் சிறந்த சூழலொன்றினைக் கட்டியெழுப்பும் நோக்கில் சமூக சேவைகள் திணைக்களம் தனது உன்னத செயற்பாடுகளினை நிறைவேற்றி வருகின்றது. திணைக்களத்தின் பணிக்கூற்றினைத் தழுவி 2019 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்ற ஒதுக்கீடுகளுக்கு இணங்க இனங்காணப்பட்ட பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களினைத் திட்டமிட்டு அடி மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை அமுலாக்கியுள்ளது. அதன் பிரகாரம் சமூக சேவைகள் திணைக்களத்தினூடாக 2019 ஆம் ஆண்டில் இடம்பெற்ற செயற்பாடுகளுடன் தொடர்பான ஒட்டு மொத்தத் தகவல்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

விசேடமாக அங்கவீனமுற்ற சமுதாயத்தினை இலக்காகக் கொண்டு அவர்களின் சமூகப் பொருளாதாரத்தினை சிறந்தவாறு முன்னெடுப்பதற்குப் பல நிகழ்ச்சித் திட்டங்கள் இடம்பெற்றுள்ளதுடன், அதனுள், திணைக்களத்தின் அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குவதற்கான வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் யாருக்கும் செய்யாத சேவையினை நிறைவேற்றி வருகின்றது. விசேடமாக அங்கவீனமுற்ற இளைய சமுதாயத்தினை இலக்காகக் கொண்டு அமுலாக்கப்பட்ட நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களினூடாக வெற்றிகரமான முன்னேற்றமொன்றினை சுவீகரிப்பதற்கு திணைக்களத்திற்கு இயலுமை கிட்டியுள்ளது.

மாவட்ட மற்றும் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள அங்கவீனமுற்ற சமுதாயத்திற்குத் தேவையான சேவைகளினை வழங்குவதற்கு சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டம் (CBR) முறைசார் திட்டமொன்றின் பிரகாரம் திட்டமிட்டு அமுலாக்கப்பட்டுள்ளது. இதன் புதிய அங்கமான வைத்தியசாலையிலுள்ள அங்கவீனமுற்ற சமுதாயத்தினைப் புனர்வாழ்வளிக்கும் நிகழ்ச்சித் திட்டம் சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ், மருத்துவசாலைத் திட்டத்திற்கு இணைக்கப்பட்ட உத்தியோகத்தர்களினூடாக அமுலாக்கப்படுகின்றது.

முன்பிள்ளைப் பருவத்தில் குழந்தைகளுக்கு ஏற்படும் உடல் மற்றும் உளப் பிரச்சினைகளைக் குறைப்பதற்கு முன்கூட்டியே தலையிட்டு தேவையான சேவை வசதிகளை வழங்குவதற்கு இத்திணைக்களத்தினூடாக அமுலாக்கப்படும் நாவின்ன சிறுவர் வழிகட்டி நிலையத்தினூடாக அங்கவீனமுற்ற குழந்தைகளின் நலன்புரிக்காக உன்னதமான கடமைப் பொறுப்பு நிறைவேற்றப்படுகின்றது.

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களைப் புனர்வாழ்வளித்தல், திணைக்களம் அமுலாக்கியுள்ள பிரதான நிகழ்ச்சித் திட்டமாகும். அதன் கீழ், போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை விடுதியில் வைத்து புனர்வாழ்வளித்தல், அவர்களினைச் சமூகத்துடன் ஒன்றிணைத்தல் மற்றும் பிரதேச மட்டத்தில் மக்களினை விழிப்புணர்வூட்டுவதன் கீழ் தடுப்பு நிகழ்ச்சித் திட்டங்களினை முன்னெடுப்பதனூடாக நாட்டின் எதிர்கால சந்ததியின் நலன்புரியினை முன்னிட்டு, குழந்தைகள் மற்றும் இளைய சமுதாயத்தினைப் புனர்வாழ்வளிக்கும் உன்னதமான கடமைப் பொறுப்பு நிறைவேற்றப்படுகின்றது.

இலக்கிடப்பட்ட சமுதாயத்தின் பொருளாதார சமூக மற்றும் கலாசார மேம்பாட்டிற்கான சில நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்படுகின்றன. அதனுள், சித்று தேசியக் கலை நிகழ்ச்சி, சுவசக்தி அபிமானி தேசிய நிகழ்ச்சித் திட்டம், அங்கவீனமுற்ற நபர்களின் தேசிய தடகள விளையாட்டு நிகழ்வு மற்றும் அங்கவீனமுற்ற பிள்ளைகளின் புத்தாண்டு வைபவம் முதல் இடத்தினைச் சுவீகரித்துள்ளது. இந்நிகழ்ச்சித் திட்டங்களினூடாக நாடுபூராவும் சகல பிரதேசங்களிலும் பரந்துள்ள அங்கவீனமுற்ற சமுதாயத்தின் இயலுமை, திறன் விருத்தி, வாழ்க்கை தொழிற் பயிற்சி பயிலுனர்கள், அவர்களின் பெற்றோர்கள், பதவியணியினர் மற்றும் பிற அங்கத்தவர்களுக்கிடையே பரஸ்பரத் தொடர்பு, புரிந்துணர்வு மற்றும் நம்பிக்கையினை வளர்த்தல் எதிர்பாரக்கப்பட்டுள்ளது.

அதே போல திணைக்களத்தின் பணிக்கூற்றினைத் தழுவியதாக சகல அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினையும் வெற்றிகரமாக்குவதற்கு, மாவட்ட, பிரதேச செயலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்ட சகல வெளிக்கள உத்தியோகத்தர்களில், வைத்தியசாலைகளுக்கு இணைப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின், திணைக்களத்தின் கீழுள்ள நிறுவனங்களுக்கு இணைக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் மற்றும் பிரதான அலுவலகத்தின் உத்தியோகத்தர்களின் வினைத்திறன், சேவை ஊக்குவிப்பு மற்றும் விளைத்திறனினை மேம்படுத்துவதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலையரங்குகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பாடநெறிகளுக்கு உத்தியோகத்தர்களினை அனுப்புவதும் இடம்பெற்று வருகின்றது.

இதன் நிகழ்ச்சித் திட்டங்கள் முக்கியமாக திணைக்களத்தினால் 2019 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பிற சகல கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பிலான அறிமுகமொன்று இவ் அறிக்கையினூடாக முன்வைக்கப்பட்டுள்ளதுடன், செலவுத் தலைப்பு 216 இன் கீழ் 2019 ஆம் ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிசார் செயற்திறன் இதனுள் சேர்க்கப்பட்டுள்ளது.

இதன் நிகழ்ச்சித் திட்டங்கள் முக்கியமாக திணைக்களத்தினால் 2019 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஏனைய சகல கருத்திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் குறித்த ஒரு அறிமுகம் இவ் அறிக்கையினூடாக முன்வைக்கப்பட்டுள்ளதுடன், செலவுத் தலைப்பு 216 இன் கீழ் 2019 ஆம் ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிசார் செயற்திறனும் இதற்குள் உள்வாங்கப்பட்டுள்ளது.

1.2 நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்

தொலைநோக்கு

2030 ஆம் ஆண்டளவில் ஓரங்கட்டடப்பட்ட மற்றும் பின்தள்ளப்பட்ட சமுதாயத்தின் உரிமைகள் மற்றும் சமத்துவம் நிரம்பப் பெற்ற பாதுகாப்பான இலங்கையொன்றை உருவாக்குவதில் முன்னோடியாக விளங்குதல்

பணிக்கூற்று

“இலக்கிடப்பட்ட சமுதாயத்தின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் வலுவூட்டுவதனூடாக சமூக உள்வாங்குதல் தொடர்பில் உள்ளக நிறுவகத்தினை ஒருங்கிணைத்தல் மற்றும் தொழில்வாண்மையான தலையீட்டினைக் கொண்டு புதுமையான பிரவேசத்தினூடாக துரிதம், வினைத்திறன் மற்றும் விளைதிறனுடனான ஆய்வுகளை நடாத்துதல், கொள்கைகளைத் திட்டமிடுதல் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுறப்படுத்துவதனூடாக எதிர்பார்த்த விளைவுகளை அடையப் பெறுதல்”

நோக்கங்கள்

- 16-35 வயதிற்கிடைப்பட்ட அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளின் வாழ்க்கைத் தொழில்சார் செயற்பாடுகள் மற்றும் வெளிச் செயற்பாடுகளை வலுவூட்டுதல்.
-
- பாதுகாவலரற்ற மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கு வதிவிடப் பாதுகாப்பினை வழங்குதல்.
- 0 - 18 வயதிற்கிடைப்பட்ட பல்வேறான அங்கவீனத்தினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் அங்கவீனத்தினைக் குறைப்பதற்கு முன்கூட்டியே தலையிடுதல்.
- அங்கவீனமுற்ற சமுதாயம் அன்றாட வாழ்க்கையில் முகங்கொடுக்கும் பல்வேறான பிரச்சினைகளைக் குறைப்பதற்குத் தலையிடுதல் மற்றும் வலுவூட்டுதல்.
- சைகை மொழியினை அங்கீகரித்தல் மற்றும் ஊக்குவித்தல்.
- அங்கவீனமுற்ற நபர்களுக்குச் சேவைகளை வழங்கும் தன்னார்வ அமைப்புக்களை வலுவூட்டுதல்.

- போதைப்பொருளுக்கு அடிமையானவர்களனை விடுதியில் வைத்துப் புனர்வாழ்வளித்தல், வாழக்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல், புனர்வாழ்வளித்தல் மற்றும் சமூகத்துடன் ஒன்றிணைத்தல்.

- பல்வேறான கால சமூகப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ள நபர்களுக்கு சரியான வழிகாட்டலினை வழங்குதல்.

- செவிப்புலனற்றவர்களுக்கு செவிப்புலனற்றவர்களுக்கான அடையாள அட்டைகள் வழங்குதல்.

- திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் அறிவு, திறன் மற்றும் உளப்பாங்குகளினை உயர் தரத்திற்குக் கொண்டுவருதல்.

1.3 பிரதான செயற்பாடுகள்

- அங்கவீனமுற்ற இளைஞர், யுவதிகளுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல், சுயதொழிலுக்கான தொழில் உபகரணங்களை வழங்குதல் மற்றும் திறந்த தொழிலுக்கு அனுப்புதல்.

- அங்கவீனமுற்ற நபர்களுக்கான தொழிற் சந்தைகளை இனங்காணுதல் மற்றும் விரிவுபடுத்துதல்.

- அங்கவீனமுற்ற நபர்களின் காலத்தின் தேவைப்பாடுகள் மற்றும் நாட்டங்களை அடையாளங் காணுதல் மற்றும் ஆய்வினை மேற்கொள்ளல்.

- விசேட தேவைகளைக் கொண்ட பிள்ளைகள் தொடர்பாக முன்கூட்டிய தலையீட்டினூடாக அவர்களை ஒன்றிணைக்கும் கல்விக்கு அனுப்புதல்.

- செவிப்புலனற்றவர்களுக்கான அடையாள அட்டைகளை வழங்குதல் மற்றும் சைகை மொழிபெயர்ப்புச் சேவைகளை வழங்குவதனூடாக செவிப்புலனற்றவர்களின் அன்றாட நடவடிக்கைகளை இலகுபடுத்துதல்.

- பாதுகாவலர்களற்ற மூளை வளர்ச்சி குன்றிய ஆண் சிறுவர்களுக்கு பாதுகாப்பினை வழங்குதல்.

- அங்கவீனமுற்ற நபர்களின் நலன்புரிக்கு முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற தன்னார்வ அமைப்புக்களுக்கு நிதியுதவி வழங்குதல்.

- 60 வயதிற்குக் குறைவான விழிப்புலனற்ற நபர்களுக்கு பார்வையினைப் பெற்றுக்கொடுப்பதற்கு கண் வில்லைகளை வழங்குதல் மற்றும் வைத்திய உதவிகளை வழங்குதல். விளையாட்டு, கல்விசார் மற்றும் கலாசார சார் உதவிகளை வழங்குதல், நிறுவனங்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் மற்றும் ஏனைய நலன்புரிச் செயற்பாடுகள்.

- சமுதாய மட்டத்திலான புனர்வாழ்வு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அங்கவீனமுற்ற நபர்களுக்கு தேவையான சேவைகளை வழங்குதல்.

- பிரதேச மட்டத்தில் அங்கவீனமுற்ற நபர்களின் சுய உதவி அமைப்புக்ளை ஸ்தாபித்தல் மற்றும் வலுவூட்டுதல்.

- போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை விடுதியில் வைத்துப் புனர்வாழ்வளித்தல் மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.

- திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் அறிவு, திறன் மற்றும் உளப்பாங்குகளினை மேம்படுத்துவதற்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகள், கருத்தரங்குகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் வேலையரங்குகளுக்கு முன்வைத்தல்.

1.4 நிறுவனக் கட்டமைப்பு
சமூக சேவைகள் திணைக்களம்



1.5 திணைக்களத்தின் கீழுள்ள பிரதான பிரிவுகள் மற்றும் நிறுவனங்கள்



1.5.1 திணைக்களத்திற்கு உரித்தான பிரிவுகள்

நிர்வாகப் பிரிவு

திணைக்களத்தின் பணிக்கூற்றினூடாக அடையச்செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களினை, வினைத்திறனாகவும், விளைத்திறனாகவும் அடையச் செய்வதற்குத் தேவையான உதவிச் சேவைகளினை வழங்குதல் நிர்வாகப் பிரிவின் பிரதான கடமைப் பொறுப்பாகும்,

அதில் மனித மற்றும் பௌதிக வளங்களினை முகாமை செய்யும் செயற்பாடுகள், நிர்வாகம்சார் கடமைகளினை முன்னெடுத்தல், கொள்கைசார் தீர்மானங்ளினை அமுலாக்குதல், திணைக்களத்தின் சகல பிரிவுகளுக்கும் உதவிச் சேவைகளினை வழங்குதல் மற்றும் பின்வரும் செயற்பாடுகள் நிர்வாகப் பிரிவினால் முன்னெடுக்கப்படுகின்றன.

- சமூக சேவைகள் திணைக்களத்தின் பொதுவான நிர்வாகச் செயற்பாடுகள் மற்றும் திணைக்களத்தின் சகல தபால் தொடர்பிலும் நடவடிக்கை எடுத்தல்.
- திணைக்களத்தின் பதவியணி தொடர்பில் உத்தியோகத்தர்களினை ஆட்சேர்ப்புச் செய்தல், பதவியுயர்வுகள், வினைத்திறன் காண் தடைப்பரீட்சை நடாத்துதல், சம்பள ஏற்றக் கொடுப்பனவு, இடமாற்றங்கள் மற்றும் ஓய்வுபெறுதல் போன்ற பிரத்தியேகக் கோவையுடன் தொடர்பிலான சகல செயற்பாடுகள்.
- புதிய பதவிகளினை அங்கீகரித்தல், ஆட்சேர்ப்புத் திட்டங்களினைத் தயாரித்தல், பதவியணியின் தகவல்களினை நாளதுவரைப்படுத்துதல், அமைச்சரவை விஞ்ஞாபனங்களினைத் தயாரித்தல் போன்ற கடமைச் செயற்பாடுகள்.
- பதவியணியின் விடுமுறை, புகையிரத ஆணைச்சீட்டுக்கள், மேலதிக நேரக் கொடுப்பனவுகள் மற்றும் இடர் கடனினை வழங்குவதற்கான செயற்பாடுகள்.
- திணைக்களத்திற்கு உரித்தான காணிகளினை ஒப்படைத்தல், அது தொடர்பிலுள்ள பிரச்சினைகளினைத் தீர்த்தல் மற்றும் அது தொடர்பிலான ஆவணங்களினை முன்னெடுத்துச் செல்லுதல்.

- அக்ரகார காப்புறுதித் திட்டத்துடன் தொடர்பிலான கடமைகள், வீட்டு வாடகைகளினை அறவீடு செய்வதுடன் தொடர்பிலான கடமைகள், வெளிநாட்டுப் புலமைப்பரிசில், வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் தகவல் சட்டத்தினை அமுலாக்குவதுடன் தொடர்பிலான கடமைகள்.
- அலுவலகக் கட்டளைகளினைச் சமர்ப்பித்தல், திணைக்களச் சுற்றுநிரூபங்கள், திணைக்களத்திற்கான ஆலோசனைகளினை வழங்குதல், ஏனைய அரச நிறுவனங்களிலிருந்து வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிரூபங்களினைப் பெற்று, சுற்றுநிரூபக் கோவைகளினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல் மற்றும் அதில் குறிப்பிடப்பட்ட விடயங்களினை அமுலாக்குதல்.
- திணைக்களத்தின் மின்சாரம், தொலைபேசி, இணையத்தளம், பாதுகாப்புச் சேவைச் செலவுகள், துப்புரவு சேவைகள், பத்திரிகைகளின் செலவுகளுக்கான பற்றுச்சீட்டுக் கொடுப்பனவுகள் மற்றும் திணைக்களத்தின் எந்திரங்கள், உபகரணங்களினைப் பழுதுபார்ப்பதுடன் தொடர்பான செயற்பாடுகள்.

சைகை மொழிப் பிரிவு

செவிப்புலனற்ற மற்றும் பகுதியளவில் செவிப்புலனற்ற நபர்களுக்கு, கல்விசார், சமூக, கலாசார சேவைகளினை வழங்குவதற்கும், மருத்துவ சுகாதார மற்றும் சட்ட வசதிகளினை வழங்குவதற்குமான தொடர்பாடல் ஊடகமாக விளங்குவது சைகை மொழியாகும். இச்சைவை மொழியினை, மொழியொன்றாக அங்கீகரிப்பதற்கு 2010.09.05 ஆந் திகதி அமைச்சரவை கொள்கைசார் தீர்மானமொன்றினை எடுத்தது.

சைகை மொழி மொழிபெயர்ப்புச் சேவையினை வழங்குவதற்கு தற்போது திணைக்களத்திற்கு சைகை மொழி உத்தியோகத்தர்கள் 06 பேர் இணைக்கப்பட்டு கடமையாற்றுவதுடன், அதில் மூவர் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்களிலும் மற்றும் ஏனைய மூவர் பிரதான அலுவலகத்தின் சைகை மொழிப் பிரிவிலும் கடமையாற்றுகின்றனர்.

செவிப்புலனற்ற நபர்களின் தொடர்பாடல் தொடர்பில், அரச நிறுவனங்களுக்குத் தேவையான உதவியினை வழங்குதல். (உதாரணமாக, பொலிஸ் நிலையங்கள், நீதிமன்றங்கள்,

வைத்தியசாலைகள், அரசின் பிற நிறுவனங்கள்) மற்றும் தேசிய தொலைக்காட்சி அலைவரிசையில் இரவு 8.00 மணி பிரதான செய்தி ஒளிபரப்பிலும் சைகை மொழிபெயர்ப்பாளரின் சேவை வழங்கப்படுகின்றது.

சமுதாய மட்டப் புனர்வாழ்வுப் (சீ.பீ.ஆர்.) பிரிவு

அங்கவீனமுற்ற நபர்களின் சமுதாயத்தினை புனர்வாழ்வளித்தல் அல்லது சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வு (சீ.பீ.ஆர்.) நிகழ்ச்சித் திட்டம், அங்கவீனமுற்ற நபர்களுக்கு சேவைகளினை வழங்குதல், சம வாய்ப்புக்களினை வகுத்தல் மற்றும் அவர்களின் மனித உரிமைகளினைப் பாதுகாத்து மேலோங்கச் செய்யும் மூலோபாயமொன்றாகும்.

அங்கவீனமுற்ற நபர்களினைப் புனர்வாழ்வளிப்பதற்கு அமுலாக்கப்பட்டு வரும் தேசிய நிகழ்ச்சித் திட்டமொன்றாக சமூக சேவைகள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் கீழ் 1994 ஆம் ஆண்டில் சீ.பீ.ஆர். நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இது வரை சமூக சேவைள் திணைக்களத்தின் சீ.பீ.ஆர். பிரிவினூடாக இந்நிகழ்ச்சித் திட்டம் அமுலாக்கப்படுகின்றது.

அங்கவீனத்தினைக் கொண்ட நபர்களுக்கும், அவர்களது குடும்பங்களுக்கும், அவர்கள் வாழும் சமூக அமைப்புகளுக்கும் இடையிலான தொடர்பினை வலுப்படுத்துதல் மற்றும் அவர்களின் பரஸ்பர இருப்பினை மேம்படுத்துவதை நோக்கங்களாகக் கொண்டு இந்நிகழ்ச்சித் திட்டத்தில் ஈடுபட்டுள்ள வெளிகளம்சார்ந்த உத்தியோகத்தர்களினை தொடர்புபடுத்துதல் அது தொடர்பிலான நிகழ்ச்சித் திட்டங்களினை ஒருங்கிணைத்தல் மற்றும் தொழிற்படுத்துவதனூடாக பின்வரும் செயற்பாடுகள் இப்பிரிவினூடாக இடம்பெறுகின்றது.

- அங்கவீனமுற்ற நபர்களுக்கு நேரடி ஒதுக்கீடுகளினை வழங்குதல் மற்றும் பின்தொடர் செயற்பாடுகளினை முன்னெடுத்தல். (கொமட், நீர், மின்சாரம வசதிகள் மற்றும் பிரவேசிப்பு வசதிகளினை வழங்குதல்.)
- பிரதேச மட்டத்தில் அங்கவீனமுற்ற நபர்களின் சுவசக்தி அமைப்புக்களினை அமைத்தல் மற்றும் வலுவூட்டுதல்.

- அரச மற்றும் அரச சார்பற்ற பிற அமைப்புக்களுடன் இணைந்து சேவைத் தேவைப்பாடுகளினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு வசதிகளினை ஏற்படுத்துதல்.
- அங்கவீனமுற்ற பிள்ளைகள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் திறன் விருத்தி நிலையங்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகளினை வழங்குதல்.
- மாவட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களினை நடாத்துதல்.

சேவைப் பிரிவு

இலங்கை பூராவும் பரந்துள்ள 16 -35 வயதிற்கிடைப்பட்ட அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளினை வலுவூட்டுவதற்கு சமூக சேவைகள் திணைக்களத்தினூடாக அமுலாக்கப்படும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் தேவையான பயிலுனர்களினை ஆட்சேர்ப்புச் செய்யும் செயற்பாடுகள், வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்களுக்கு அனுப்புதல், பயிலுனர் கொடுப்பனவுகளினை வழங்குதல் மற்றும் உபகரணத் தொகுதிகளினை வழங்குதல் உட்பட சகல நலன்புரிச் செயற்பாடுகளையும் ஒருங்கிணைத்தல் மற்றும் பின்வரும் செயற்பாடுகள் இப்பிரிவினூடாக இடம்பெறுகின்றது.

- தன்னார்வத் தொண்டு அமைப்புக்களுக்கு பராமரிப்பு உதவிகள் பயிலுனர் கொடுப்பனவுகளினை வழங்குதல்.
- முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கொடுப்பனவுகளினை வழங்குதல்.
- செவிப்புலனற்ற நபர்களுக்கு அடையாள அட்டைகளினை வழங்குதல்.
- சிறுவர் வழிகாட்டி நிலையத்தின் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளினை முன்னெடுத்தல்.
- போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு மறுவாழ்வளிக்கும் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளினை முன்னெடுத்தல்.
- உளநலம் குன்றிய நபர்களினை இல்லத்தில் வைத்திருப்பதற்கான ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள்.

அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவு

அபிவிருத்திப் பிரிவினூடாக திணைக்களத்தின் ஒட்டுமொத்தச் செயற்பாட்டில் நேரடியாக தாக்கம் செலுத்தும் பல கடமைப் பொறுப்புக்கள் இடம்பெற்று வருகின்றது. விசேடமாக உத்தியோகத்தர்களின் திறன்களினை மேம்படுத்துவதற்கு இணையாக இடம்பெறும் பயிற்சிகள், அறிவினை நாளதுவரைப்படுத்தல் மற்றும் விளைத்திறனாக மேம்படுத்துதல் போன்றன முக்கியமான இடத்தினைப் பெற்றுள்ளன.

அதேபோல தேசிய நிகழ்ச்சித் திட்டங்களினை ஒருங்கிணைத்தல், தொடர்புபடுத்தல் மற்றும் தொழிற்படுத்தல், பல்வேறு கருத்திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல், தகவல்களினை நாளதுவரைப்படுத்தல், நவீன சமூக போக்குகளினை அடையாளங்காணுதல் மற்றும் அவற்றினை பயன்படுத்துதல் தொடர்பிலும் முக்கியமான கடமைப் பொறுப்பொன்று நிறைவேற்றப்படுகின்றது. அதற்கு மேலாக திணைக்களத்தின் நோக்கங்களினைத் தழுவி திணைக்களத்தின் செயற்பாடுகளினை முன்னெடுத்துச் செல்லுவதற்கு பின்வரும் செயற்பாடுகளும் இடம்பெறுகின்றது.

- திணைக்களத்தினூடாக வருடந்தோறும் நடாத்தப்படும் தேசிய நிகழ்ச்சித் திட்டங்களினை (தேசிய தடகள விளையாட்டுப் போட்டி, சித்றூ தேசிய கலை நிகழ்ச்சி, புத்தாண்டு வைபவம்) ஒருங்கிணைத்தல் மற்றும் தொழிற்படுத்துதல்.
- திணைக்களத்தின் வருடாந்த செயற்பாட்டுத் திட்டம், செயற்திறன் அறிக்கை மற்றும் முன்னேற்ற அறிக்கைகளினைத் தயாரித்தல்.
- திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை ஒருங்கிணைத்தல் மற்றும் நடாத்துதல்.
- ஜய்க்கா (JICA) கருத்திட்டங்களுடன் தொடர்பிலான கருத்திட்ட அறிக்கைகள், முன்மொழிவுகளினை முன்வைத்தல் மற்றும் உரிய சகல ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளினையும் முன்னெடுத்தல்.
- வைத்தியசாலைகளில் நோயாளர்களின் நலன்புரிச் செயற்பாடுகளுக்கு உரிய உத்தியோகத்தர்கள் தொடர்பிலுமான சகல ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள்.
- வேலையற்று வெட்டியாகத் திரிபவர்களின் சட்டத்தினைத் திருத்தும் செயற்பாடுகள்.

- அமுணுகும்புர வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிறுவனத்தின் பாடநெறிகள் மற்றும் பௌதிக சுற்றாடல் மேம்பாட்டிற்கான விசேட கருத்திட்டங்களினை அமுலாக்குதல்.
- அங்கவீனமுற்ற நபர்களுக்கு பல்வேறு நிவாரணங்களினை வழங்குதல், சர்வதேச தரநிலைகள், குறிகாட்டிகள், கோட்பாடுகள் மற்றும் நவீன சித்தாந்தங்களினை அடையாளம் காணுதல்.
- விளைத்திறனான நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.

கணக்குகள் பிரிவு

சமூக சேவைகள் திணைக்களத்திற்கான தொழிற்பாடுகள், அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான வருடாந்த ஒதுக்கீடுகளினைப் பெற்றுக்கொள்ளுதல், முகாமை செய்தல், கொடுப்பனவுகளினைச் செய்வதுடன், அரச கணக்குகளினை முன்னெடுத்துச் செல்லுவதில் வெளிப்படைத் தன்மையுடன், நிதிப் பிரமாணங்களினூடாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள், நிதியினை மோசடியில்லாது ஒழுக்கத்துடன் முன்னெடுத்துச் செல்லுதல் கணக்குகள் பிரிவினூடாக நிறைவேற்றப்படும் பிரதான கடமைப் பொறுப்பாகும்.

இதில் பிரதானமாக கணக்காளரின் வழிகாட்டல், முகாமை, கண்காணிப்பு மற்றும் செயற்படுத்தலினூடாக கணக்குச் செயற்பாடுகள் இடம்பெறுவதுடன், நிதிப் பிரமாணங்கள், விசேட ஏற்பாடுகள் மற்றும் அரசின் சுற்றிநிரூபங்களினூடாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பின்வரும் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

- சமூக சேவைகள் திணைக்களத்திற்கு உரித்தான ஒட்டுமொத்த வருடாந்த பாதீட்டு ஆவணத்தினைத் தயாரித்து குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் தேசிய பாதீட்டுத் திணைக்களத்திற்கு முன்வைத்தல்.
- சகல கொடுக்கல் வாங்கல்களினைச் சரியாக நாளதுவரைப்படுத்தி கணக்கு வைத்தல் மற்றும் கணக்குகளினை முன்வைத்தல்.
- நிதிக் கொள்கைகளினை வடிவமைத்தல் மற்றும் நிதி முகாமைத்துவத்தினை வலுவூட்டுவதற்கு உயர் முகாமைத்துவத்திற்கு உதவுதல்.
- சகல பெறுவனவு மற்றும் செலவுகளினைக் கண்காணித்தல் மற்றும் செலவுகளினை முகாமை செய்தல்.

- செலவுகளினை மீளாய்வு செய்வதற்கு உயர் முகாமைத்துவத்திற்கு முன்மொழிவுகளினை முன்வைத்தல்.
- பொதுத் திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களத்திற்கு இறுதிக் கணக்குகளினை முன்வைத்தல் மற்றும் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளினை முன்னெடுத்தல்.
- சகல கொள்வனவுகளின்போதும் வெளிப்படைத்தன்மையுடனான கொள்முதல் நடைமுறையினூடாக நிதிசார் சட்டதிட்டங்களினை சரியானவாறு அமுலாக்குதல் மற்றும் உதவுதல்.
- சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழுள்ள அரசின் சொத்துக்களினை நாளதுவரைப்படுத்தல் மற்றும் ஆய்வுசெய்தல்.

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 133 மற்றும் 134 பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட கடமைகள் மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டியில் சொல்லப்பட்ட ஆலோசனைகள் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் VII வது பகுதியின் 40 வது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம், சமூக சேவைகள் திணைக்களத்திற்கு நேரடியாக அறிக்கையிடும் கடப்பாட்டுடன் பிரதான உள்ளகக் கணக்காய்வாளருடன் இப்பரிவு அமுலாக்கப்படுகின்றது.

அதேபோல நிறுவனத்தின் நோக்கங்களினை அடையும்போது நிதியினைத் திட்டமிடுதல், உள்ளகக் கட்டுப்பாடு, புத்தகங்கள் மற்றும் கணக்குகளினைச் சரியானவாறு முன்னெடுத்துச் செல்லுதல், நிதி முகாமை, கண்காணிப்பு மற்றும் முகாமைத்துவத் தகவல்களினை வழங்கும் திட்டம், விளைத்திறனாக இடம்பெறுவதாக உறுதிப்படுத்துதல் இப்பிரிவின் நோக்கமாகும்.

1.5.2 திணைக்களத்தின் கீழுள்ள நிறுவனங்கள்

1.5.2.1 வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்

அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் 08 கம்பகா, கண்டி, இரத்தினபுரி, கம்பாந்தோட்டை மற்றும் புத்தளம் போன்ற மாவட்டங்களில் அமுலாக்கப்படுகின்றது. நாடுபூராவும் செறிந்துள்ள 16-35 வயதிற்கிடைப்பட்ட அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளின் தொழில்சார் இயலுமைகளினை வலுவூட்டுவதை நோக்கமாகக் கொணடு 26 பயிற்சிப் பாடநெறிகள் இவ் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்களினூடாக அமுலாக்கப்படுகின்றன.



வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவகங்களினால் முன்னெடுக்கப்பட்டு வரும் பாடநெறிகள்

01. வானொலி, தொலைக்காட்சி மற்றும் அதனுடன் தொடர்பான உபகரணங்களின் தொழில்நுட்ப கைவினை
02. குளிர்சாதனப் பெட்டி மற்றும குளிரூட்டி தொழில்நுட்ப கைவினை
03. தச்சு மற்றும் மரம் செதுக்குதல் தொழில் கைவினை
04. தையல் இயந்திரங்களைத் திருத்தஞ் செய்தல் (தொழிற்சாலைகள்)
05. கைப்பணித் தொழில் (மூங்கில் மற்றும் சிரட்டை)

06. கைப்பணித் தொழில் (விளக்குமாறு மற்றும் தும்புத்தடி)
07. கைப்பணித் தொழில் (கரும்பு மற்றும் தும்பு)
08. கைப்பணித் தொழில் (துணி வடிவமைப்பு)
09. ஆடைகளைத் தைத்தல் கைவினை
10. தையல் கைவினை
11. மசாஜ் சிகிச்சை
12. மேசன்றி
13. மோட்டார் வாகனத் தொழில்நுட்பக் கைவினை
14. பொறிகள் கைவினை
15. மின் வல்லுனர்
16. மோட்டார் வாகனங்களுக்கு வர்ணம் பூசும் கைவினை
17. உருக்குக் கைவினை
18. சீமெந்து உற்பத்தி செய்யும் கைவினை
19. காலணிகள் மற்றும் தோல் பொருட்கள் கைவினை
20. பற்றிக் கைவினை
21. வெதுப்பகம் மற்றும் உணவு நுட்பக் கைவினை
22. வீட்டுத் தோட்டப் பயிர் வளர்ப்பு கைவினை
23. துணி நெசவுத் தொழில்நுட்பம்
24. கணனி
25. முச்சக்கர வாகனங்கள் தொழில்நுட்பக் கைவினை
26. அழகியல் கலை

செயற்பாடுகள்

- அங்கவீனமுற்ற இளைஞர், யுவதிகளுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல்.
- முறைசார் வகையில் பயிற்சியினை நிறைவு செய்துள்ள பயிலுனர்களுக்கு சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் சமூகத்துடன் ஒன்றிணைத்தல்.
- சுய தொழில்களுக்கான உபகரணத் தொகுதிகளை வழங்குதல், திறந்த சந்தைப் பிரிவில் தொழில் வாய்ப்புக்களினை அறிமுகப்படுத்துதல்.

I. சீதுவ வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்

இங்கிலாந்தில் ஷெனானா மிஷனரி அமைப்பினூடாக தொடங்கிய பள்ளிகளின் கீழ், ஒரு தொழில்முறை வேலையாக விழிப்புலனற்ற மற்றும் செவிப்புலனற்ற நபர்களுக்கு சேவைகளினை வழங்குவதற்கென்று ஆரம்பிக்கப்பட்டு, 1956, ஒக்டோபர் 01 ஆந் திகதி அரசுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள இந்நிறுவனம் மேல் மாகாணத்தின் கம்பகா மாவட்டத்தில் கட்டான பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சீதுவ என்ற இடத்தில் அமைந்துள்ளது.

அங்கவீனமுற்ற நபர்களுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சி வழங்குதல் மற்றும் புனர்வாழ்வளிப்பதனூடாக சிறந்த, உன்னதமான பொருளாதாரம் மற்றும் சமூக நிலையினை சமூகத்தினுள் ஏற்படுத்துவதை பணிக்கூற்றாகக் கொண்டு சுமார் 140 அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்கு விடுதி வசதிகளுடன், ஒருவருடம் மற்றும் இரண்டு ஆண்டுகள், 11 பாடநெறிகளினூடாக வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல் இந்நிறுவனத்தினூடாக இடம்பெறுகின்றது.

II. தௌம்புயாய வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்

தென் மாகாணத்தில், கம்பாந்தோட்டை மாவட்டத்தில், வீரகெட்டிய பிதேச செயலகப் பிரிவில், அங்குணுகொளபலஸ்ஸ என்ற இடத்தில் அமையப் பெற்ற இந்த வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம், 1981 ஆம் ஆண்டு, மார்ச் 28 ஆந் திகதி சமூக சேவைகள் திணைக்களத்தின் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிறுவனமொன்றாக ஆரம்பிக்கபட்டுள்ளது.

அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளினை விளைத்திறனான தொழிலொன்றில் ஈடுபடுத்துவதற்கும், உயர் வாழ்க்கைத் தரமொன்றினைப் பெற்றுக் கொடுப்பதற்கும் தேவையான வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல் மற்றும் வழிகாட்டலினூடாக நாட்டின் பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளில் பங்களிப்புச் செய்வித்து நோக்கங்களினை அடையச் செய்யும் பொருட்டு, சுமார் 100 அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்கு விடுதி வசதிகளுடன்கூடிய 08 வாழ்க்கைத் தொழிற் பயிற்சிப் பாடநெறிகள் அமுலாக்கப்படுகின்றன

.

III. வத்தேகம வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்

1963.02.15 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம், மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தின் குண்டகசாலை பிரதேச செயலகப் பிரவிலுள்ள வத்தேகம, வாவின்ன என்ற இடத்தில் அமைந்துள்ளது.

விசேட தேவைகளினைக் கொண்ட இளைஞர் யுவதிகளை இனங்காணுதல், புனர்வாழ்வளித்தல் மற்றும் வாழ்க்கைத தொழிற்பயிற்சியினூடாக வலுவூட்டி சமூகத்துடன் ஒன்றிணைப்பதனூடாக பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்வதை பணிக்கூற்றாகக் கொண்டு, விழிப்புலனற்றவர்களுக்கு மாத்திரம் நெசவு நெய்யும் பாடநெறியுடன் ஆரம்பிக்கப்பட்ட இந் நிறுவனம், தற்போதைய சந்தையினை இலக்காகக் கொண்டு நவீன எந்திரப் பொறித்தொகுதிகளினை உபயோகித்து முறைசார் மற்றும் ஒழுங்கான 10 பாடநெறிகளினை மாத்திரம் முன்னெடுத்து வருகின்றது. இதில் விசேட தேவைகளினைக் கொண்ட பெண்கள் மற்றும் ஆண்கள் பயிலுனர்கள் 100 க்கும் அதிகமானவர்கள் விடுதியில் வைத்து வாழ்க்கைத் தொழிற்பயிற்சியினை வழங்குவதற்கு சகல வசதிகளும் வழங்கப்பட்டுள்ளது.

IV. அமுனுகும்புர வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்

மேல் மாகாணத்தில் கம்பகா மாவட்டத்தின் மகர பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வத்துறுகம, அமுனுகும்புர என்ற இடத்தில் அமைந்துள்ள இந்நிறுவனம், சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் உள வளர்ச்சி குன்றிய அங்கவீனமுற்ற நபர்களுக்கென, 1990 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அது 1991 ஆம் ஆண்டில் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனமொன்றாக மேம்படுத்தப்பட்டுள்ளது.

விசேட தேவைகளினைக் கொண்ட பிள்ளைகளுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குவதனூடாக அவர்களினை சுயமாக எழச் செய்வதற்குத் தேவையான பொருளாதார, சமூக சுற்றுச்சூழலினை ஏற்படுத்துதல் மற்றும் அவர்களின் திறனினை வலுவூட்டுவதைப் பணிக்கூற்றாகக் கொண்டு, சுமார் 100 அங்கவீனமுற்ற ஆண் பிள்ளைகளுக்கு விடுதி வசதிகளுடன்கூடிய, 06 வாழ்க்கைத் தொழிற் பயிற்சிப் பாடநெறிகள் அமுலாக்கப்படுகின்றன.

V. கெட்டவல வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்

1968 ஆம் ஆண்டில் அமெரிக்க ஐக்கிய இராச்சிய அரசின் உதவியின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிறுவனம் மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தின் கங்கவட்ட கொறளே பிரதேச செயலகப் பிரிவிலுள்ள, கெட்டவல, லெவில என்ற இடத்தில் அமைந்துள்ளது.

இலங்கையின் அங்கவீனமுற்ற நபர்களுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்கி, விளைத்திறனான தொழிலொன்றுக்கு ஈடுபடுத்துவதற்கும் மற்றும் சிறந்த வாழ்க்கைத் தரமொன்றினைச் பெற்றுக் கொள்ளுவதற்குத் தேவையான சூழலினை கட்டியெழுப்புவதும், அவர்களினை நாட்டின் பொருளாதார அபிவிருத்திச் செயற்பாட்டின் பங்குதாரர்களாக்குவதைப் பணிக்கூற்றாகக் கொண்டு, சுமார் 50 அங்கவீனமுற்ற பயிலுனர்களுக்கு விடுதி வசதிகளுடன்கூடிய ஈராண்டு வாழ்க்கைத் தொழிற் பயிற்சி பாடநெறிகள் 06 முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

VI. இராகம வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்

1984 ஜனவரி மாதம் 28 ஆந் திகதி சமூக சேவைகள் திணைக்களம் மற்றும் சுகாதார சேவைகள் திணைக்களத்துடன் இணைந்து, சுசுமினா ((முதுகு முள்ளந்தண்டு வளைவு) அங்கவீனமுற்ற நபர்களுக்கு, வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்கும் நோக்குடன், மேல் மாகாணத்தில், கம்பகா மாவட்டத்தின், ஜா-எல பிரதேச செயலகப் பிரிவிலுள்ள, இராகம புனர்வாழ்வு வைத்தியசாலையில் இந்த வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

அங்கவீனமுற்ற நபர்களுக்கு வினைத்திறன் மற்றும் மிகவும் விளைத்திறனான வாழ்க்கைத் தொழிற்பயிற்சியொன்றினை வழங்குவதனூடாக அவர்களின் அதிஉன்னதமான திறமைகள், இயலுமைகளினை மெருகூட்டி வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தி சமூக அபிவிருத்தியின் செயலூக்கமான பங்குதாரர்களாக உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் நடவடிக்கை எடுப்பதை இந்நிறுவனத்தின் பணிக்கூற்றாகக் கொண்டு சுசுமினா அங்கவீனமுற்ற நோயாளர்களினை தொழில்வாண்மை ரீதியில் வலுவூட்டுதல் மற்றும் புனர்வாழ்வளிப்பதற்கு சுமார் 04 பாடநெறிகள் செயற்படுத்தப்படுகின்றன.

VII. மாதம்பே வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்

வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தின் மாதம்பே பிரதேச செயலகப் பிரிவிலுள்ள, பொத்துவில என்ற இடத்தில், அங்கவீனமுற்ற நபர்களுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியுடன் பாதுகாப்பு நிலையமொன்றாக 2006 ஆம் ஆண்டில் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிறுவனமொன்றாக அமைக்கப்பட்டு, 2014 ஆம் ஆண்டு, யூலை 15 ஆந் திகதி, இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரச கொள்கைகளுக்கிணங்க வளங்களினை ஒருங்கிணைத்தல் மற்றும் மக்களின் பங்களிப்புடன் நிலைபேறான ஒரு திட்டமிட்ட செயல்முறையினூடாக விசேட தேவைகளினைக் கொண்ட இந்நாட்டின் பிள்ளைகளினை நிலைபேறான அபிவிருத்தியின் பங்குதாரர்களாக உருவாக்குவதை பணிக்கூற்றாகக் கொண்டு, சுமார் 30 அங்கவீனமுற்ற பயிலுனர்களுக்கு விடுதி வசதிகளுடன்கூடிய 03 வாழ்க்கைத் தொழிற் பயிற்சிப் பாடநெறிகளினூடாக வாழ்க்கைத் தொழிற் பயிற்சி வழங்கப்படுகின்றது.

VIII. களவான வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்

சப்பிரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தின் களவான பிரதேச செயலகப் பிரிவிலுள்ள, பகள குகுளேகம என்ற பகுதியில் அமைந்துள்ள இந்நிறுவனம், 2006 மார்ச் 24 ஆந் திகதி மூளைவளர்ச்சி குன்றிய ஆண் பிள்ளைகளுக்கு வாழ்க்கைதக் தொழிற் பயிற்சியினை வழங்குவதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 2015 மார்ச் மாதம் 01 ஆந் திகதி சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அங்கவீனமுற்ற நபர்களின் திறமைகளினை இனங்காணுதல், பிரதான நீரோட்டத்திற்கு அவர்களினை உள்ளீர்ப்புச் செய்யும் மூலோபாயமொன்றாக வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல், அதனூடாக அவர்களுக்கு சமூகப் பயன்பாடு மற்றும் வாழ்வாதாரத்திற்குள்ள உரிமையினை உறுதிப்படுத்துவதற்காக நிறுவனம்சார் கடமைப் பொறுப்பினை நிறைவேற்றுவதை பணிக்கூற்றாகக் கொண்டு, சுமார் 30 அங்கவீனமுற்ற ஆண் பிள்கைகளுக்கு விடுதி வசதிகளுடன்கூடிய 03 வாழ்க்கைத் தொழிற் பயிற்சிப் பாடநெறிகளினூடாக வாழ்க்கைத் தொழிற் பயிற்சி வழங்கப்படுகின்றது.

1.5.2.2 ஜயவிரு சமாதி புனர்வாழ்வு நிறுவனம்

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களினைப் புனர்வாழ்வளித்தல், சமூகத்துடன் ஒன்றிணைத்தல், தொழில்வாண்மையான இயலுமைகளினை மேம்படுத்துவதற்கு 2001 ஆம் ஆண்டில் ஆரம்பிகப்பட்டுள்ள இந்நிறுவனம், மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தின் சீத்தாவக்க பிரதேச செயலகப் பிரவிலுள்ள புவக்பிட்டிய நோர்த் அம்பலன்வத்த என்ற இடத்தில் அமைந்துள்ளது.

உண்மையான வாழ்க்கை தத்துவம், வாழ்க்கையின் உண்மையான மகிழ்ச்சியினைச் சொல்லிக் கொடுத்து வாழ்க்கைத் திறன்களை மேம்படுத்துவதன் மூலம் போதைப் பொருள் எனும் வலையில் வீழ்ந்த இளைஞர் சந்ததியினை தேசிய வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்யும் நோக்கத்துடன் பல்வேறு போதைப்பொருட்களுக்கு அடிமையான கிட்டத்தட்ட 100 பேருக்கு மறுவாழ்வு அளிக்கப்படுகிறது.

செயற்பாடுகள்

- போதைப்பொருளுக்கு அடிமையானவர்களினைப் புனர்வாழ்வளித்தல், அவர்களின் வாழ்க்கைத் தொழிற் திறன்களினை மேம்படுத்துதல் மற்றும் சமூகத்துடன் ஒன்றிணைத்தல்.
- போதைப்பொருளுக்கு அடிமையானதன் காரணத்தினால் அவர்களின் குடும்பச் சூழலில் எழுந்துள்ள சிக்கல்களினைக் குறைப்பதற்கு தலையீடு செய்தல்.
- போதைப்பொருள் பாவனையின் காரணமாக சரிந்த தொழில்கள் மற்றும் கல்வி நடவடிக்கைகளினை பழைய நிலைக்குக் கொண்டு வந்து அது தொடர்பில் உரிய பங்குதாரர்களுடன் தொடர்புகளினைக் கட்டியெழுப்புதல்.
- கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய குழுக்களுக்கு போதைப் பொருள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.

1.5.2.3 ஜயவிரு செவன பாதுகாப்புப் புகலிடம்

பெற்றோர் அரவணைப்பற்ற உளநலம் பாதிக்கப்பட்ட அங்கவீனமுற்ற ஆண் பிள்ளைகளுக்கு பாதுகாப்பினை வழங்குவதற்கென 2007 யூலை மாதம் 31 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ள ஜயவிரு செவண நிறுவனம், மேல் மாகாணத்தில். கொழும்பு மாவட்டத்தின் சீதாவக்க பிரதேச செயலகப் பிரிவிலுள்ள புவக்பிட்டிய நோர்த் அம்பலன்வத்த என்ற இடத்தில் அமைந்துள்ளது.

மூளைவளர்ச்சி குன்றிய சமுதாயத்திற்கு பாசம் மற்றும் அன்பினை வழங்குவதனூடாக அவர்களின் இயலுமைகள் மற்றும் திறமைகளினை வளர்ப்பதற்கு வாய்ப்பினை வழங்குதல் மற்றும் அவர்களினை உற்பத்திச் செயற்பாட்டில் பங்குபற்றச் செய்து தேசிய அபிவிருத்தியின் பங்குதாரர்களாக்குவதை பணிக்கூற்றாகக் கொண்டு இந்நிறுவனத்தினூடாக சுமார் உளவர்ச்சி குன்றிய 75 ஆண் பிள்ளைகளுக்கு விடுதியில் வைத்து பாதுகாப்பு வழங்கப்படுகின்றது.

1.5.2.4 நாவின்ன சிறுவர் வழிகாட்டி நிலையம்

அங்கவீனமுற்ற பிள்ளைகளுக்கு சேவைகளினை வழங்குவதற்கு முற்கூட்டியே தலையிடும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள எண்ணக்கருவின் பிரகாரம், 2003 ஆம் ஆண்டில் இந் நிறுவனம், மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தின் மகரகம பிரதேச செயலகப் பிரிவிலுள்ள நாவின்ன, பதிரகொட என்ற இடத்தில் அமைந்துள்ளது.

பெற்றோர்கள் மற்றும் குடும்ப அங்கத்தவர்கள் சவால்களினை பெருமையுடன் எதிர்கொள்ளுவதற்கு வலுவூட்டுதல், விசேட தேவைகளினைக் கொண்ட பிள்ளைகளின் ஆகக்கூடிய வளர்ச்சிக்கு முற்கூட்டியே தலையீடு செய்தல், ஊக்குவித்தல் சரியான நேரத்தில் அணுகக்கூடிய சேவை வலையமைப்பொன்றினை கட்டியெழுப்பும் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்யும் ஒரு இடைத்தரகராகச் செயற்பட்டு சேவைநாடியினரினை மகிழ்ச்சியடைச் செய்யும் பணிக்கூற்றினை நோக்காகக் கொண்டு சுமார் 80 அங்கவீனமுற்ற பிள்ளைகளுக்கு பின்வரும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

செயற்பாடுகள்

- குழந்தையின் அங்கவீனத்தினை முற்கூட்டியே அடையாளங்கண்டு அது தொடர்பில் தலையீடு செய்யும் மிகவும் விளைத்திறனான திட்டங்களினை அறிமுகப்படுத்துதல்.
- அங்கவீனமுற்ற பிள்ளைகளுக்கு சேவைகளினை வழங்குதல் தொடர்பிலான பல்வேறு துறைகளின் சேவை வலையமைப்பினை வலுப்படுத்தல்.
- விசேட தேவைகளைக் கொண்ட சிறார்களின் முன் பிள்ளைப் பருவக் கல்வி மற்றும் ஒன்றுதிரட்டும் கல்வியினை வலுப்படுத்தல்.
- பெற்றோர்கள் மற்றும் குடும்ப அங்கத்தவர்களின் உளத்தரத்தினை மிகவும் சிறந்த தரத்திற்குக் கொண்டு வந்து அது தொடர்பில் ஆலோசனை சேவைகளினை முன்னெடுத்தல்.

1.6 திணைக்களத்தின் கீழுள்ள நிதியம்

விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியம்

அங்கவீன நிலைமைக்கு உட்படுகின்ற நபர்களுக்குத் தேவையான சேவைகளை வழங்குதல், புனர்வாழ்வளித்தல் மற்றும் நிவாரணம் வழங்குதல் இந் நம்பிக்கை நிதியத்தின் பணியாகும். 1981 ஆம் ஆண்டு சர்வதேச அங்கவீனர் வருடமாகப் பிரகடனஞ் செய்தவேளையில் இலங்கையினுள் அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பான புதிய எண்ணக்கரு வளர்ச்சி முறைமைகள் ஆரம்பமானது. அதன் பிரகாரம் இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினூடாக 1992 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க “விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியம்” என்ற பெயரில் சட்டமொன்று நிறைவேற்றப்பட்டு அரச வர்த்தமானி அறிவித்தலொன்றினூடாக பிரசுரிக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்திற்கு ஒத்ததாக இலங்கையில் வசிக்கின்ற விழிப்புலனற்ற நபர்களுக்கு இலங்கை அரசினால் பல்வேறு சேவைகள் ஆரம்பிக்கப்பட்டு சமூக சேவைள் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தில் இந்த நிதியம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

செயற்பாடுகள்.

- சுய தொழிலினை முன்னெடுத்துச் செல்லுவதற்கு உதவிகளை வழங்குதல்.
- விளையாட்டுச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லுதல் மற்றும் மேம்படுத்துவதற்கு உதவிகளை வழங்குதல்.
- கல்விசார் மற்றும் கலாசாரம் சார் செயற்பாடுகளுக்கு உதவிகளை வழங்குதல்.
- விழிப்புலனற்ற, பல்கலைக்கழக மாணவர்களுக்கு புலமைப்பரிசில் உதவிகளை வழங்குதல்.

- உயர் தரத்தினைத் தொடரும் விழிப்புலனற்ற மாணவர்களுக்கு நிதி உதவிகளை வழங்குதல்.
- குறைந்த வருமானப் பயனாளிகளுக்கு இலவசமாகக் கண் வில்லைகளை வழங்குதல்.
- நலன்புரிச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லுதல்.
- விழிப்புலனற்ற மகளிர் நலன்புரி நிலையங்களை முன்னெடுத்துச் செல்லுதல்.
- நிர்வாகச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லுதல்.
- பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்துதல்.
- தேவைப்பாடுகளின் கீழ் நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு பல்வேறான செலவுகளை ஈடு செய்தல்.
- நடமாடுதல் மற்றும் நெறிப்படுத்துதல் பயிற்சியினை வழங்குவதற்கு போதனைக் கொடுப்பனவுகளை வழங்குதல்.

1.7 வெளிநாட்டு உதவி கிடைக்கப் பெறும் கருத்திட்டங்களின் தகவல்கள்.

கருத்திட்டம் I – " Project for Promoting Support Participation of Person with Disabilities through Introduction of a Job Coach & Service Improvements in Pilot Project Areas."

பங்குதாரர்கள் - Japan International Cooperation Agency – JICA
கருத்திட்டத்தின் செலவு - ரூபா. 360 மில்லியன்
கருத்திட்டக் காலவரையறை - 04 வருடங்கள்

கருத்திட்டம் II – " Increase Employability of Visually Impaired Persons through the Formation & Establishment of a Japanese Medical Manual therapy Course in Sri Lanka"

பங்குதாரர்கள் - Japan International Cooperation Agency – JICA
கருத்திட்டத்தின் செலவு - ரூபா. 9.6 மில்லியன்
கருத்திட்டக் காலவரையறை - 02 வருடங்கள்

அத்தியாயம் 02

முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்

2.1 சமூக சேவைகள் திணைக்களத்தின் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் முன்னேற்றம்

2.1.1 அங்கவீனமுற்ற நபர்களுக்கான நலன்புரி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

- ❖ அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளினைப் புனர்வாழ்வளித்தல், வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல் மற்றும் சமூகத்துடன் ஒன்றிணைத்தல்.
- ❖ ஆரம்பப் பிள்ளைப் பருவத்தில் ஏற்படும் அங்கவீன நிலையினை இனங்கண்டு தேவையான தலையீடுகளினைச் செய்தல் மற்றும் மேம்படுத்துதல்.
- ❖ பாதுகாவலர்களற்ற மூளை வளர்ச்சி குன்றிய ஆண் பிள்ளைகளுக்கு பாதுகாப்பினை வழங்குதல்.
- ❖ அங்கவீனமுற்ற நபர்களுக்கான சமுதாய மட்ட ஒருங்கிணைந்த அபிவிருத்தி தேசிய நிகழ்ச்சித் திட்டம்.
- ❖ விழிப்புலனற்றவர்களுக்கான புனார்வாழ்வு நம்பிக்கை நிதியம்
- ❖ அங்கவீனமுற்ற சிறுவர் சிறுமிகளின் விளையாட்டுக்கள் மற்றும் கலைத் திறன் நிகழ்ச்சித் திட்டம்.
- ❖ அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளினைப் புனர்வாழ்வளித்தல், வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல் மற்றும் சமூகத்துடன் ஒன்றிணைத்தல்.

திணைக்களத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் 08 வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்களுக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட அங்கவீனமுற்ற இளைஞர், யுவதிகளுக்கு வாழக்கைத் தொழிற்பயிற்சியினை வழங்குதல் இந்நிகழ்ச்சித் திட்டத்தினூடாக இடம்பெறுகின்றது. கம்பகா, கண்டி, இரத்தினபுரி, கம்பாந்தோட்டை மற்றும் புத்தளம் போன்ற மாவட்டங்களில் இந்த வாழக்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்கள்

நிறுவப்பட்டுள்ளதுடன், நாடுபூராவும் செறிந்துள்ள அங்கவீனமுற்ற இளைஞர், யுவதிகளின் தொழில்வாண்மை இயலுமைகளினை வலுவூட்டுதல் இதனூடாக இடம்பெறுகின்றது.

16 - 35 வயதிற்கிடைப்பட்ட எந்தவொரு பயிற்சிக்கும் தகைமையினைக் கொண்ட அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகள் நேர்முகப் பரீட்சையின் பின்னர் அவர்களின் இயலுமைகளுக்குப் பொருந்தும் பயிற்சிப் பாடநெறிகளுக்கு தெரிவு செய்யப்படுவர். பாடநெறியின் இயல்புக்கமைவாக பயிற்சிக் காலப்பகுதி வேறுபடும் என்பதுடன், அதன் பிரகாரம், ஒரு வருடம் அல்லது இரு வருடம் முறைசார் பயிற்சியொன்று, தெரிவு செய்த பயிலுனர்களுக்கு வழங்கப்படுகின்றது. பல்வேறு பாடநெறிகள் 26 இன் கீழ், இப்பயிற்சி வழங்கப்படும் என்பதுடன், பயிற்சிக் காலப்பகுதியினுள் விடுதி வசதிகள், உணவுபானங்கள், அன்றாடக் கொடுப்பனவுகள் மற்றும் மருத்துவ வசதிகள் இலவசமாக வழங்கப்படும். 2019 ஆம் ஆண்டில் வெற்றிகரமாகப் பயிற்சி நிறைவு செய்த பயிலுனர்களுக்கு சுய தொழில்கள் தொடர்பிலான கருவிகள் மற்றும் முறைசார் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு அவர்களினை தொழிலில் ஈடுபடுத்துவதற்கும் மற்றும் சமூகத்துடன் ஒன்றிணைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டில் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்களின் பிரகாரம் பயிலுனர்களின் எண்ணிக்கை.

தொ. இல.	நிறுவனம்	2019 ஆம் ஆண்டில் பயிலுனர்களின் எண்ணிக்கை
01.	சீதுவ வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்	98
02.	கெட்டவல வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்	44
03.	வத்தேகம வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்	104
04.	தெளம்புயாய வாழ்க்கைத் தொழிற்	93

	பயிற்சி நிறுவனம்	
05.	அமுணுகும்புர வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்	73
06.	களவான வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்	28
07.	மாதம்பே வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்	30
08.	இராகம வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்	30
	மொத்தம்	500

2019 சமூக சேவைகள் திணைக்களத்தினூடாக தன்னார்வ நிறுவனங்களில் பயிற்சியினைப் பெறும் பயிலுனர்களுக்கு கொடுப்பனவுகளினை வழங்குதல்.

தொ. இல.	நிறுவனம்	2019 ஆம் ஆண்டில் பயிலுனர்களின் எண்ணிக்கை
01.	அங்கவீனமுற்ற நபர்களின் அபிவிருத்தி மன்றம் - பண்டாரவளை	26
02	பட்டுக்கம்மன வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்- பலாங்கொடை	22
03.	உளநலம் பாதிக்கப்பட்ட பெண்களினைப் புனர்வாழ்வளிக்கும் நிலையம் - ரொட்டுவ	26
04.	தேசிய உள நல சுகாதார சபை - கொழும்பு	20
05.	திறன் விருத்தி நிலையம் - இராஜாங்கன	44
	மொத்தம்	138

அங்கவீனமுற்ற நபர்களின் நலன்புரி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றம்.

செலவுத் தலைப்பு 216- 02- 03 - 1- 1501 (2019/12/31 ஆந் திகதியன்று)

தொ. இல.	செயற்பாடுகள்	ஒதுக்கீடுகள் ரூபா.	செலவு ரூபா.
01.	பயிற்சி தொடர்பிலான மூலப்பொருட்கள் மற்றும் பிற	34,000,000.00	
	I. மூலப் பொருட்கள் II. பிற நலன்புரிச் செலவுகள் III. போதனைப் பயிற்சிக் கொடுப்பனவுகள் IV. கல்விச் சுற்றுலாக்கள்		14,326,673.00
02.	முறைசார் வகையில் தொழிற் பயிற்சியினை நிறைவு செய்த பயிலுனர்களுக்கு கருவித் தொகுதியினை வழங்குதல்.		
	I. ரூபா. 15,000/- பெறுமதியான 102 கருவித் தொகுதியினை வழங்குதல். II. 45 தையல் எந்திரங்களினை 45 பயிலுனர்களுக்கு வழங்குதல்.		1,586,194.00 1,604,250.00
03.	சிறுவர் வழிகாட்டி நிலையம்		
	I. சேவைநாடியினரின் வருகைக் கொடுப்பனவினை வழங்குதல். II. பொழுதுபோக்குக்கான செலவுகள் III. சிகிச்சையாளர்களுக்கான கொடுப்பனவுகள்		1,697,172.00
04.	திணைக்களத்தின் கீழ் நிதி அனுசரணையினைப் பெறும் தன்னார்வ அமைப்புக்களின் பராமரிப்பு மற்றும் மீட்பு உதவியினை வழங்குதல்.		
	I. செவிப்புலனற்றோர்களுக்கான சபை II. சுவர்ணதாம மன்றம்		100,000.00

05.	மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கொடுப்பனவுகளினை வழங்குதல்.		
	I. வீரகெட்டிய அருணல்ல விசேட பாடசாலை -ஆசிரியர்கள் - 02 பேர் II. கட்டுவான நிட்டிகயாய முன்பள்ளி - ஆசிரியர்கள் - 02 பேர் III. படல்கும்புர லிட்டில் பிளவர்ஸ் சிறுவர் திறன் விருத்தி நிலையம் - ஆசிரியர்கள் - 03 பேர் IV. நுவரெலியா வொலட்ரீம் சிறுவர் திறன் விருத்தி நிலையம் - ஆசிரியர்கள் - 03 பேர் V. தோலங்கமுவ சிறுவர் வழிகாட்டி நிலையம் - ஆசிரியர்கள் - 03 பேர் VI. இப்பாகமுவ விசேட கல்வி நிலையம் - ஆசிரியர் - 01 பேர் VII. மாலமுல்ல திறன் விருத்தி நிலையம் - ஆசிரியர் - 01 பேர் VIII. அக்மிமன சிறுவர் திறன் விருத்தி நிலையம் - ஆசிரியர் - 01 பேர் IX. சிறுவர் வழிகாட்டி நிலையம் கட்டுவான - 01 ஆசிரியர்.		1,530,000.00
06.	2019 – தேசிய தடகள விளையாட்டுப் போட்டிக்கான - ரீ -சேட், பொட்டம், தொப்பி, சப்பாத்து, சொக்ஸ்.		2,683,336.00
07.	சித் று 2019 தேசிய கலாசார கலை விழாவுக்கான பரிசில்கள் மற்றும் உடைகள்		2,689,615.00
08.	வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் சீருடைகள் - ரீசேட் பொட்டம்		1,583,560.00
09.	தன்னார்வ அமைப்புக்களின் பயிலுனர்களுக்கு போக்குவரத்து, தேநீர் மற்றும் சிற்றுண்டிக் கொடுப்பனவுகள்.		
	I. நுவரெலியா - வொல்ட்றம் திறன் விருத்தி நிலையம் II. தோலங்கமுவ சிறுவர் விருத்தி நிலையம்		

	III. இராஜாங்கன சிறுவர் விருத்தி நிலையம் IV. இப்பாகமுவ விசேட கல்வி நிலையம் V. படல்கும்புர சிறுவர் விருத்தி நிலையம் VI. மாலமுல்ல திறன் விருத்தி நிலையம் VII. சிறுவர் வழிகாட்டி நிலையம் கட்டுவான		2,566,200.00
10.	செவிப்புலனற்றவர்களுக்கு அடையாள அட்டைகளினை வழங்குதல் – 418		
11.	செவிப்புலனற்றவர்களுக்கு சைகை மொழி பெயர்ப்புச் சேவையினை வழங்குதல் – 750		
	மொத்தம்	34,000,000.00	30,367,000.00

அங்கவீனமுற்ற நபர்களின் நலன்புரி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றம்.

செலவுத் தலைப்பு 216-02-03-13 – 1501 (2019/12/31 ஆந் திகதியன்று)

தொ. இல.	செயற்பாடுகள்	ஒதுக்கீடுகள் ரூபா.	செலவு ரூபா.
01.	திணைக்களத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்களிலுள்ள 500 அங்கவீனமுற்ற பயிலுனர்களுக்கு பயிலுனர் கொடுப்பனவுகளினை வழங்குதல். (ஒரு பிள்ளைக்கு ரூபா. 150/-)	35,000,000.00	25,894,800.00
02.	திணைக்களத்தின் நிதி அனுசரணை கிடைக்கும் தன்னார்வத்தொண்டு வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்களின் 138 பயிலுனர்களுக்கு பயிலுனர் கொடுப்பனவுகளினை வழங்குதல்.(பயிலுனர் ஒருவருக்கு வருகை தரும் தினமொன்றுக்கு ரூபா. 75/- வும், நிறுவனத்திற்கு ரூபா. 75/- என்றவாறு நாளொன்றுக்கு ரூபா. 150/- கொடுப்பனவு)		

❖ சிறுவர் வழிகாட்டி நிகழ்ச்சித் திட்டம்

பிள்ளையின் முன்பிள்ளைப் பருவத்தின் வளர்ச்சியில் ஏதாவது வேறுபாடு அல்லது தாமதமொன்று ஏற்பட்டுள்ளதாக சந்தேகத்திற்கு இடமின்றி அறிந்து கொண்டுள்ள வேளையில் அது தொடர்பில் முற்கூட்டியே தலையிட்டு பிள்ளையின் வளர்ச்சி தொடர்பில் தேவையான சேவைகளை வழங்குவது இந்நிகழ்ச்சித் திட்டத்தினூடக இடம்பெறுகின்றது. சரியான வழிகாட்டலொன்றை எதிர்பார்த்து நிற்போர், இந்நிறுவனத்திற்கு பிள்ளைகளுடன் வருகை தரும் பெற்றோர்களுக்கு முதலில் இடம்பெறும் செயற்பாடு யாதெனில் பிள்கைளின் வாழ்க்கை வரலாறுகளைப் பெற்று பதிவு செய்தலாகும். பிள்ளையின் தேவையினை அறிந்து ஆரம்ப வளர்ச்சி நிலையினை மதிப்பிடுவதாகும். விபரமான நிலவர அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டதன் பிற்பாடு ஆசிரியர்கள், பெற்றோர்களுடன் கலந்துரையாடி பிள்ளைகளின் திறன்களுக்கமைய பொருத்தமான வகுப்பு அறைக்கு அனுப்புதல் இடம்பெறும். 06 மாதங்களுக்கு வருடமொன்றுக்கென அவர்களின் திறன் மற்றும் வளர்ச்சி நிலவர அறிக்கைகள் தயாரிக்கப்படும் என்பதுடன் மேலும் அவசியமாயின் நீண்டகாலத்திற்கு அவர்களின் பின்னூட்டற் செயற்பாடுகள் இடம்பெறும்.

- 2018 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட புதிய சிறார்களின் எண்ணிக்கை - 49
- முன்பள்ளிகளுக்கு அனுப்பப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை - 07
- பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை – 18

2019 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட புதிய சேவைநாடியினரின் எண்ணிக்கை - 49 (ஆண் பிள்ளைகள் 38 /பெண் பிள்ளைகள் 11)

வயது வரம்பு (வருடம்)	அங்கவீனத்தின் தன்மை									மொத்தப் பிள்ளைகளின் கூட்டுத் தொகை
	ஓட்டிசம்	பெருமூளை வாதம்	டவுன்ட் சின்ட்றம்	வளர்ச்சியில் தாமதம்	பேச்சுக் கோளாறு	உயர் செயல்திறன்	செவிப்புலக் குறைபாடு	உளப் பாதிப்பு	பிற	
0 – 03	-	01	-	01	-	-	-	-	02	**04**
03 – 05	02	01	01	06	-	-	-	-	02	**12**
05 – 15	10	-	03	04	02	-	01	02	07	**29**
15 – 18	01	01	-	-	01	-	-	01	-	**04**
18 ஐ விடக் கூட	-	-	-	-	-	-	-	-	-	
மொத்தம்	13	03	04	11	03	-	01	03	11	**49**

2019 ஆம் ஆண்டின் மொத்த சேவைநாடியினரின் எண்ணிக்கை - 105 (ஆண்கள் 67 /பெண்கள் 38)

வயது வரம்பு (வருடம்)	அங்கவீனத்தின் தன்மை									மொத்தப் பிள்ளை களின் கூட்டுத் தொகை
	ஓட்டிசம்	பெருமூளை வாதம்	டவுன்ட் சின்ட்றம்	வளர்ச்சியில் தாமதம்	பேச்சுக் கோளாறு	உயர் செயல்திறன்	செவிப்புலக் குறைபாடு	உளப் பாதிப்பு	பிற	
0 – 03	-	-	03	02	-	-	-	-	03	08
03 – 05	05	03	04	06	03	01			01	23
05 – 15	13	13	07	17	-	04	02	03		59
15 – 18	-	02	03	03	02	01	-	-	-	11
18 ஐ விடக் கூட	-	01	-	02	-	-	-	01		04
மொத்தம்	18	19	17	30	05	06	02	04	04	105

ஒவ்வொரு பிரிவுகளினூடாக வழங்கப்பட்ட சேவைகள் தொடர்பிலான விபரங்கள்.

இல.	வழங்கப்பட்ட சேவை	பிள்ளைகளின் எண்ணிக்கை	தடைவைகளின் எண்ணிக்கை
01	உடற்பயிற்சிச் சிகிச்சை	55	221
02	பேச்சுப் பயிற்சிச் சிகிச்சை	105	804
03	தொழிற் பயிற்சி சிகிச்சை	61	138
04	கல்வி மற்றும் ஆரம்பகாலத் தொழிற் பயிற்சி	97	6540

❖ **பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலரற்ற மூளை வளர்ச்சி குன்றிய ஆண் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பினை வழங்குதல்.**

பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலரற்ற பல்வேறு வயது மட்டத்திலுள்ள மூளை வளர்ச்சி குன்றுய ஆண் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பினை வழங்குதல் இக்கருத்திட்டதினூடாக இடம்பெறுகின்றது. வாழ்நாள்பூராவும் இவ்விடுதியிலுள்ள இப்பிள்ளைகள் தனிமைப்படுத்தப்படாது அன்பாகவும், பாசத்துடனும் பாதுகாக்கப்படுவதுடன், அன்றாடச் செயற்பாடுகளுக்கும் முன்வைக்கப்படுகின்றனர். விடுதி வசதிகள் உட்பட உணவு பானங்கள் மற்றும் வைத்திய வசதிகள் இலவசமாக வழங்குதல் இடம்பெறுகின்றது.

2019 ஆம் ஆண்டில் பாதுகாப்பு வழங்கப்பட்ட பிள்ளைகள் - அங்கவீன மட்டத்தின் பிரகாரம்

தொ. இல.	அங்கவீனத்தின் தன்மை	எண்ணிக்கை
01.	உள மந்தம்	58
02.	உளநலம் குன்றிய	04
03.	பேச்சு மற்றும் கேட்பதில் குறைபாடு	04
04.	நடமாடுவதில் குறைபாடு	04
05.	பார்வைக் குறைபாடு	03
06.	பல்வேறு அங்கவீனம்	01
மொத்தம்		**74**

❖ சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வுத் தேசிய நிகழ்ச்சித் திட்டம் (சீ.பீ.ஆர்.)

அங்கவீனமுற்ற நபர்களின் தேசியக் கொள்கைக்கமைய, அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்து பொறுப்புக்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுவதற்கு இயலுமானவாறு அவர்களின் அறிவு மற்றும் திறமைகளை வலுவூட்டுதல் பிரதானமாக இடம்பெறுகின்றது. அதேபோல அச்சமுதாயத்தின் குடும்ப அங்கத்தவர்களின் பொருளாதாரம் மற்றும் அங்கத்துவத்தினை சிறந்தவாறு முன்னெடுப்பதை உறுதிப்படுத்தும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களும் இதன் கீழ் அமுலாக்கப்படுகின்றது.

சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டம் - நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்

செலவுத் தலைப்பு 216 -02 -03 -5 – 2509 (2019/12/31 ஆந் திகதியன்று

கருத்திட்டம்	நிகழ்ச்சித் திட்டம்	பௌதிக முன்னேற்றம்	மதிப்பீடு ரூ.மி.	செலவு ரூ.மி.
சுவசக்தி அமைப்புக்களினை மதிப்பீடு செய்தல். -2019	அடி மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை சுவசக்தி அமைப்புக்களினை பாராட்டுதல் - பரிசில்கள் மற்றும் விருதுகளினை வழங்குதல்.	தேசிய மட்டம் வரை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.	3.5	0.853
நேரடி உதவிகள்	அங்கவீனமுற்ற சமுதாயத்திற்கு. • கொமட் மலசலகூடம் • மின்சார வசதிகள் • பிரவேசிப்பு வசதிகள் • காற்று மெத்தைகளினை வழங்குதல். • நீர் மெத்தைகளினை வழங்குதல் • நீர் வசதிகள் • பிற உதவிகள்	463	6.875	6.843

